# நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர்!



11.02.2026 நிகழ்வுகள்

## கழக மக்களவை - மாநிலங்களவை உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகள்!

### 1. பழங்குடிப் பகுதிகளில் மொபைல் கோபுரங்கள் அமைக்க நடவடிக்கை எடுத்திடுக

காஞ்சிபுரம் ஜி.செல்வம்

திருவண்ணாமலை சி.என்.அண்ணாதுரை





தமிழ்நாட்டின் மலைப்பகுதிகளில் வாழும் பழங்குடியின மக்களின் பல குடியிருப்புகள் மொபைல் இணைப்புமகள் இல்லாமல் பாதிக்கப்படுகின்றன. டிஜிட்டல் பாரத் நிதி மூலம் தமிழ்நாட்டின் கிராமப்புற, தொலைதூர மற்றும் பழங்குடிப் பகுதிகளில் அரசு மொபைல் கோபுரங்களை அமைக்கும் திட்டம் குறித்து தமிழ்நாட்டில் உள்ள பழங்குடி சமூகங்களுக்கு சரியான நேரத்தில் முறையான உள்கட்டமைப்பு வசதிகள், மற்றும் தடங்கலில்லா மொபைல் சேவைகளை வழங்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

### 2. சேவை தர விதிமுறைகளை மீறும் செல்போன் நிறுவனங்கள்மீது நடவடிக்கை எடுக்க தாமதம் ஏன்?

பொள்ளாச்சி ஈஸ்வரசாமி



இந்திய தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் தொந்தரவு தரும் அழைப்புகளுக்கு அபராதம் விதிப்பது, சேவை தர விதிமுறைகளை மீறுதல் மற்றும் சேவை தரத்தின் அறிக்கையை சமர்ப்பிப்பதில் ஏற்படும் தாமதம் தொடர்பாக TRAI பிறப்பித்திருக்கும் உத்தரவுகள் குறித்தும் இந்த கணக்குகளுக்கு விதிக்கப்பட்ட அபராதத்தை சேவை வழங்குநர்களிடமிருந்து TRAI இன்னும் பெறாதது ஏன்?

### 3. தமிழ்நாட்டில் இரயில் பாதைகளை மின்மயமாக்கல் திட்டங்கள் கிடப்பில் போடப்பட்டது ஏன்?

தேனி தங்க தமிழ்ச்செல்வன்

கோவை கணபதி ராஜ்குமார்





தமிழ்நாட்டில் இன்றுவரை இரயில் பாதைகளின் மின்மயமாக்கல் நிலுவையில் உள்ளது குறித்தும், இத்திட்டத்திற்கு கடந்த ஐந்து ஆண்டுகளில் செலவிடப்பட்ட தொகையின் விவரங்கள் கேட்டும் திமுக மக்களவை உறுப்பினர்கள் கணபதி ராஜ்குமார் மற்றும் தங்க தமிழ்செல்வன் கேள்வி எழுப்பியுள்ளனர். இத்திட்டங்கள் முடிவடைய விதித்திருக்கும் காலக்கெடு என்ன? 2023-24 மற்றும் 2024-25 நிதியாண்டுகளில் முடிக்கப்பட்ட மொத்த கிலோமீட்டர் தூரம் என்ன என்றும் அவர்கள் கேட்டுள்ளனர்.

### 4. நிலக்கரி சுரங்கத்தைத் திறப்பதற்கான விதிகள் குறித்த அறிவிப்பில் குழப்பங்கள் ஏன்?

சேலம் டி.எம்.செல்வகணபதி



நிலக்கரி சுரங்கத்தைத் திறப்பதற்கான நிலக்கரி கட்டுப்பாட்டு அமைப்பின் ஒப்புதலை ரத்து செய்யும் விதிகளை அரசாங்கம் அறிவித்திருப்பது குறித்தும் இந்தத் திருத்தம் சம்பந்தப்பட்ட நிலக்கரி நிறுவனத்தின் வாரியத்திடம் தேவையான அனுமதிகளை வழங்க அதிகாரம் உள்ளதா? 180 நாட்கள் அல்லது அதற்கு மேல் செயல்படாத சுரங்கங்களை மீண்டும் தொடங்க அனுமதிக்கும் இந்தத் திருத்தத்தின் விவரங்கள் என்ன? நிலக்கரி கட்டுப்பாட்டு அமைப்பின் பங்கு வாரியத்தால் ஏற்கனவே வழங்கப்பட்ட ஒப்புதல் பற்றிய தகவல்களைப் பெறுவதற்கான வாய்ப்புகள் என்ன?

### 5. தமிழ்நாட்டில் ப்ராட்பேண்ட் சேவை மேம்படுத்தும் பாரத்நெட் திட்டத்தில் சுணக்கங்கள் ஏன்?

கள்ளக்குறிச்சி தே.மலையரசன்




பாரத்நெட்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் இணைக்கப்பட்டுள்ள கிராம பஞ்சாயத்துகளின் எண்ணிக்கை என்ன? இரண்டாம் கட்டத்தை முடிக்க நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள் மற்றும் அதற்கான காலக்கெடு? தமிழ்நாட்டில் பாரத்நெட்டை செயல்படுத்துவதில் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் அவற்றை சமாளிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்? தமிழ்நாட்டில் உள்ள அரசு மற்றும் தனியார் சேவை வழங்குநர்கள் பிராட்பேண்ட் இணைப்பை வழங்க பாரத்நெட் உள்கட்டமைப்பைப் பயன்படுத்துவதன் அளவு? மலிவு விலையில் இணைப்புகள் வழங்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்? கிராமப்புற மற்றும் தொலைதூரப் பகுதிகளில், குறிப்பாக தமிழ்நாட்டில் தொலைத்தொடர்பு உள்கட்டமைப்பை விரிவுபடுத்துவதில் எதிர்கொள்ளும் சவால்கள் என்ன?

# சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் ரூ.6078.40 கோடியில் – பேரூரில் கடல்நீரை குடிநீராக்கும் நிலையத்தின் கட்டுமானப் பணிகள்!

## அமைச்சர் கே.என். நேரு நேரில் ஆய்வு செய்தார்!





சென்னை, பிப்.13-

நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் 6 ஆயிரத்து 78 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், பேரூரில் அமைக்கப்பட்டு வரும் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் உற்பத்திதிறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையத்தின் கட்டுமான பணிகளை 11.02.2026 அன்று ஆய்வுசெய்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான குடிநீர், பூண்டி, சோழவரம், புழலேரி, கண்ணன்கோட்டை தேர்வாய்கண்டிகை, செம்பரம்பாக்கம், வீராணம் ஆகிய ஏரிகள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் நெம்மேலியில் உள்ள 110, 150 மில்லியன் லிட்டர் உற்பத்திதிறன் கொண்ட கடல் நீரை குடிநீராக்கும் நிலையங்கள் மூலம் நாளொன்றுக்கு 1230 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. சென்னை மாநகரின் நீண்ட கால குடிநீர்த் தேவை மற்றும் மக்களின் அன்றாட குடிநீர் தேவையைக் கருத்தில் கொண்டு, சென்னை குடிநீர் வாரியம் பல்வேறு நடிவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

சென்னையின் வளர்ச்சிக்கேற்ப குடிநீர் ஆதாரங்களை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் 21.08.2023 அன்று சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை (JICA) நிதியுதவியுடன் செங்கல்பட்டு மாவட்டம், கிழக்கு கடற்கரைச் சாலையில் உள்ள பேரூரில் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள்.

இந்நிலையத்தின் கட்டுமான பணிகள் தற்போது முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. கடல் நீரை உட்கொள்ளும் கட்டமைப்பு (Intake Structure), செதிலடுக்கு வடிகட்டி (Lamella Clarifier), சவ்வூடு வெளியேற்றும் தெளிந்த நீர் தொட்டி (RO Permeate Tank), நடுநிலைபடுத்தும் தொட்டி (Neutralization Pit), நீர்சேகரிப்பு தொட்டி (Product water tank), சுத்திகரிக்கப்பட்ட நீர் சேகரிப்பு தொட்டி (Clear water reservoir), கசடுகளை கெட்டிப்படுத்தும் தொட்டி (Sludge Thickener), நிர்வாகக் கட்டிடம் (Admin Building), பண்டகசாலை (Warehouse), சுண்ணாம்பு செறிவூட்டும் நிலையம் (Limestone Filter), எதிர்மறை சவ்வூடு பரவல் நிலையம் (RO Building), எதிர்மறை சவ்வூடு பரவல் நீர்செலுத்தும் தொட்டி (RO Feed tank), காற்றழுத்தம் மூலம் எண்ணெய் மற்றும் கசடுகளை அகற்றும் தொட்டி (Dissolved Air Flotation), புவிஈர்ப்பு ஈரடுக்கு வடிகட்டி நிலையம் (Gravity Dual Media Filter), இரசாயன கட்டிடம் (Chemical Building), மின்சார கட்டிடம் (Electrical Building) மற்றும் தொழிற்கூடங்களுக்கான (Workshop) கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றது.

கடல்சார் பணிகளாக 2500 மில்லி மீட்டர் விட்டமுள்ள HDPE குழாய்கள் கடல்படுக்கையின் அடியில் பதிக்கப்பட்டுள்ளது. இதில் 2 கடல்நீரை உட்கொணரும் குழாய்கள் 1140 மீட்டர் மற்றும் 1150 மீட்டர் நீளத்திற்கும், உவர்நீர் வெளியேறும் குழாய் 756 மீட்டர் நீளத்திற்கும் குழாய் பதிக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. கடல்நீரை உட்கொணரும் கோபுர (Caisson) கட்டுமான பணிகள் நிறைவுற்று, கடலில் பதிக்கப்பட்ட குழாய்களின் இறுதி பகுதியில் இணைப்பதற்கான ஆயத்த பணிகள் நடைப்பெற்று வருகிறது.

இத்திட்டத்தின் ஒரு பகுதியாக நீரேற்று நிலையம் மற்றும் நீர்தேக்க தொட்டி கட்டமைப்பு அமைப்பதற்கான கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றன.

இத்திட்டத்தில், ஒரு பகுதியாக பேரூரிலிருந்து போரூர் வரை 59 கிலோ மீட்டர் நீளத்திற்கு குழாய் பதிக்கும் பணியில், 2000 / 1800 விட்டம் உள்ள குழாய்கள் 19.5 கிலோ மீட்டர் நீளத்திற்கு கொண்டுவரப்பட்டு, அதில் 4.1 கிலோ மீட்டர் குழாய்கள் பாதிக்கப்பட்டு பணிகள் தொடர்ந்து நடைபெற்றுவருகிறது. மேலும், மண்டலம் 13 (அடையாறு) க்குட்பட்ட பள்ளிப்பட்டு மற்றும் திருவான்மியூர் நீரேற்ற நிலையங்களிலிருந்து சுற்றியுள்ள பகுதிகளுக்கு 24/7 தொடர்ச்சி யான குடிநீர் விநியோகம் செய்ய குடிநீர் கட்டமைப்பு விரிவுபடுத்தும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. நடைபெற்றுவரும் கட்டுமான பணிகளை நிர்ண யிக்கப்பட்ட கால அளவிற்குள் முடித்திடுமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த திட்டத்தின் மூலம், பெருநகர சென்னை மாநகராட்சி, தாம்பரம் மாநகராட்சி மற்றும் சென்னை மாநகராட்சியின் அருகாமையில் உள்ள 20 ஊராட்சிகள் ஆகிய பகுதிகளில் உள்ள 22.67 இலட்சம் மக்கள் பயன் அடைவார்கள்.

இவ்வாய்வின் போது, சென்னை குடிநீர் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், செயல் இயக்குநர் கௌரவ் குமார், இ.ஆ.ப., தலைமைப் பொறியாளர் திருமதி.ஜ.சுகந்தி, மேற்பார்வை பொறியாளர் திருமதி. இ. சாந்தி, செயற்பொறியாளர்கள் ஸ்.கிருபா கரவேல், ஜெ.வெங்கடேசன் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.





கோவை வடக்கு மாவட்டம், தொண்டாமுத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, பூலுவபட்டி பேரூராட்சி வார்டு எண்: 13 வடிவேலாம் பாளையத்தில் ரூபாய் 21.50 லட்சம் மதிப்பீட்டில் கான்கிரீட் சாலை மறுசீரமைப்பு பணியினை வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி தலைமையில் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர், திருப்பூர் தெற்கு மாவட்ட கழகப் பொறுப்பாளர் கே.ஈஸ்வரசாமி துவக்கி வைத்தார். இதில் ஒன்றிய கழகச் செயலாளர் சாமிபையன் (எ) செல்லப்பன், பேரூர் கழக செயலாளர் அ.சின்ராஜ், பேரூராட்சி தலைவர் ராஜலட்சுமி, பொருளாளர் வி.ஆர்.குழந்தைவேல், கவுன்சிலர் ராஜாமணி உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# பெரம்பலூரில் -“தமிழ்நாடு தலைகுனியாது” பொதுக்கூட்டம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் –திண்டுக்கல் ஐ.லியோனி சிறப்புரை! வீ.ஜெகதீசன் - எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

பெரம்பலூர், பிப்.13–

பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதி சார்பில் ”தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரை பொதுக்கூட்டம், புதிய பேருந்து நிலையத்தில், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் தலைமையில், பெரம்பலூர் ஒன்றிய கழக செயலாளர் ம.இராஜ்குமார் வரவேற்புரையில், ஒன்றிய கழக செயலாளர் என். கிருஷ்ணமூர்த்தி,



சேலம் கிழக்கு மாவட்டம் ஆத்தூர் அரசு பெண்கள் மேல் நிலைப் பள்ளியில் தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டி களை மாணவியர்களுக்கு மாவட்ட பொருளாளர் ஆர். வி. ஸ்ரீராம், மாவட்ட அவைத் தலைவர் முரா. கருணாதிதி ஆகியோர் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் நகர மன்ற உறுப்பினர் மீனாட்சி , தெற்கு நகர செயலாளர் ஏ.ஜி.ராமச்சந்திரன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் ஆவின் செல்வமணி, தலைமையாசிரியர் , ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

சி.இராஜேந்திரன், தி.மதியழகன், ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் டாக்டர் செ.வல்லபன், ந.ஜெகதீஷ்வரன், அழகு.நீலமேகம்,நகர அவைத்தலைவர் கோ.ரெங்கராஜ், நகர துணைச் செயலாளர்கள் நூ.சபியுல்லா, கல்பனா முத்துக்குமார், நகர கழக பொருளாளர் முகமது அசாரூதீன், மாவட்ட ப்பிரதிநிதிகள் எஸ்.ராஜேந்திரன், கே.அன்பழகன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் போக்குவரத்துத் துறை மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கழக கொள்கை பரப்பு செயலாளர், தமிழ்நாடு பாடநூல் கழக தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

இதில் பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் தங்க.சித்தார்த்தன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, மாநில வர்த்தக அணி துணை அமைப்பாளர் குன்னம் சி.இராஜேந்திரன்,

தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் கி.முகுந்தன், செ.அண்ணாதுரை, டி.கே. ராமச்சந்திரன், பட்டுச் செல்வி ராஜேந்திரன், ஆர்.முருகேசன், மாவட்ட அவைத்தலைவர் அ.நடராஜன், மாவட்ட துணைச் செயலாளர் தழுதாழை பாஸ்கர், நூருல்ஹிதா இஸ்மாயில், சன்.சம்பத், மாவட்ட கழக பொருளாளர் செ.ரவிச்சந்திரன், பேரூர் கழகச் செயலாளர்கள் எம்.வெங்கடேசன், ஆர்.ரவிச்சந்திரன், செல்வலெட்சுமி சேகர், ஏ.எஸ். ஜாகிர்உசேன், முன்னாள் ஒன்றிய குழுத் தலைவர்கள் பிரபா செல்லப்பிள்ளை, க.ராமலிங்கம், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன், துணை அமைப்பாளர்கள் அ.அப்துல்கரீம், டி.ஆர்.சிவசங்கர், வ.சுப்ரமணியன், ஆர்.அருண், மா.பிரபாகரன், வழக்கறிஞர் அணி மாவட்ட அமைப்பாளர் காடூர்.கவியரசு, மாவட்ட இளைஞர் அணி முன்னாள் அமைப்பாளர் கே.ஜி.மாரிக்கண்ணன்,

மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தங்க.கமல், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் தி.இராசா, துணை அமைப்பாளர் ஜி.கே. மூர்த்தி, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் புஷ்பவள்ளி ராஜேந்திரன்,

தொ.மு.ச.கவுண்சில் பேரவை மாவட்ட தலைவர் கே.கே.எம்.குமார், தொ.மு.ச. மாவட்டப் கவுன்சில் பேரவை செயலாளர் ஆர்.ரெங்கசாமி, மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் கவிஞர்.முத்தரசன், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஆர்.வேணுகோபால், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் நெ.அருண்குமார், மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் அ.கருணாநிதி, மாவட்ட அயலக அணி அமைப்பாளர் ஏ.ரசூல்அகமது, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ரமேஷ் ராஜேந்திரன்,

மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் க.ரமேஷ், மாவட்ட விவசாய கூலித்தொழிலாளர் அணி அமைப்பாளர் ஏ.எம்.கே.கரிகாலன், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் சி.காட்டுராசா,

கலை இலக்கிய பேரவை மாவட்ட அமைப்பாளர் எம். சுந்தர்ராஜ், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் வெ.ரமேஷ்,மாவட்ட மீனவரனி அமைப்பாளர் வி.சி. ரவி,மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் ஆர்.குமார்,

மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் எம்.மணிவாசகம், தலைமை கழக பேச்சாளர் மு.விஜயரத்தினம், மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் எம். ரெங்கராஜ், மாவட்ட பிரதிநிதி எஸ். அழகுவேல், வேப்பந்தட்டை கிழக்கு இளைஞர் அணி துணை அமைப்பாளர் ரா.சிவா,

மருத்துவர்கள் டாக்டர் எஸ். செங்குட்டுவன், லட்சுமி கருணாகரன் மற்றும் இ.பி.கணேசன், முன்னாள் , இன்னாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், வார்டு, கிளைக் கழக செயலாளகள் உள்ளிட்ட 5 ஆயிரம் பேர் கலந்து கொண்டனர்.

வேப்பந்தட்டை மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் செ.நல்லதம்பி நன்றியுரையாற்றினார்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## மு.மலையாளம்

பிப்ரவரி 13 (2000)



கழகக் கொள்கையில் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் இணைந்து பணியாற்றியவர்.

திருச்சி, மணப்பாறை நகரக் கழகச் செயலாளர், மாவட்ட பிரதிநிதி என பொறுப்புகள் வகித்தவர்.

தியாகேசர் பஞ்சாலை தொழிலாளர் முன்னேற்றச் சங்கத் தலைவராக பொறுப்பு வகித்து, தொழிலாளர் நலத்திற்கென பாடுபட்டவர்.

மணப்பாறை நகர்மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.


தலைமைக் கழகம்

தி.மு.க.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## நாமக்கல் இரா. அருணகிரி

பிப்ரவரி 13 (2005)



நாமக்கல் நகர இளைஞர் அணி அமைப்பாளராகவும் பின்னர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளராக இரு முறை பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

நாமக்கல் நகராட்சி மன்ற உறுப்பினராகவும், நாமக்கல் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் தலைவராகவும், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி அமைப்புக்குழு துணைத் தலைவராகவும், மாநில கூட்டுறவு இணையத்தின் இயக்குநராகவும் பணியாற்றியவர்.

சட்டநகல் எரிப்பு, ஈழத் தமிழர் பிரச்சினை உள்ளிட்ட கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.